Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 266 | உள்ளூர் - 24.09.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 266 | வெளியூர் - 25.09.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

12 பாவக் காரகங்கள் 7ஆம் பாவம் பலன்கள்? | ரயில்வேயில் 1,684 பணியிடங்கள்! | சபரிமலையில் தங்கக் கிரீடம் மாயம்! | தவெகவுக்கு ஆதரவு! ஜி.கே.வாசன்!

## மக்கள் கொந்தளிப்பால் டிரம்ப் எடுக்கும் வரலாற்று முடிவு!



வாஷிங்டன், செப். 24–

அமெரிக்காவில் டீசல் விலை உயர்ந்துள்ள நிலையில், அதன் ஏற்றுமதிக்குத் தடை விதிப்பது குறித்து டிரம்ப் அரசு ஆலோசித்து வருவதாகச் செய்தி வெளியாகியுள்ளது. முழுமை யான தடையா அல்லது ஏற்றுமதியை 50 சதவீதம் கட்டுப்படுத்துவதா என்பது குறித்து ஆய்வு நடைபெறுவதாக அமெரிக்கக் கருவூலச் செயலாளர் ஸ்காட் பெசென்ட் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. டீசல் விலை உயர்வு சரக்குப் போக்குவரத்துச் செலவையும் அத்தியாவசியப் பொருட்களின் விலையையும் அதிகரிப்பதால், உள்நாட்டுத் தேவைக்கு முன்னுரிமை அளிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் முக்கிய டீசல் ஏற்றுமதி நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. எனவே, ஏற்றுமதி கட்டுப்பாடு அமலானால் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட இறக்குமதி நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடும் விலை உயர்வும் அதிகரிக்கக்கூடும். ஏற்கெனவே போர்களால் பாதிக்கப்பட்டுள்ள உலகளாவிய எரிபொருள் விநியோகம் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகலாம்.

## வெள்ளை மாளிகையில் ஊடகங்களுக்கு தடை! மீண்டும் அனுமதிக்க டிரம்புக்கு நீதிமன்றம் உத்தரவு!



வாஷிங்டன், செப். 24–

வெள்ளை மாளிகைக்குள் நுழைய மூன்று செய்தி நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களுக்கு மீண்டும் அனுமதி வழங்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேர்மையற்ற முறையில் பொய்யான செய்திகளை வெளியிடுவதாக குற்றம்சாட்டி, சிஎன்என், பொலிடிகோ மற்றும் எம்எஸ் நவ் ஆகிய தொலைக்காட்சி நிறுவனங்கள் வெள்ளை மாளிகைக்குள் நுழையத் தடை விதிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தார். தொடர்ந்து, சனிக்கிழமை முதல் வெள்ளை மாளிகைக்குள் தாங்கள் அனுமதிக்கப்படவில்லை என்று அந்நிறுவனங்கள் குற்றச்சாட்டை முன்வைத்தன.

இதனிடையே, ஊடகங்களுக்கு எதிராக டிரம்பின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்காவின் முன்னணி செய்தி நிறுவனங்கள், டிரம்ப் தொடர்பான செய்தி ஒளிபரப்பை நிறுத்துவதாக அறிவித்தன.

இந்த நிலையில், டிரம்பின் தடை உத்தரவுக்கு எதிராக என்என், பொலிடிகோ மற்றும் எம்எஸ் நவ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி டிம் கெல்லி அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது, இந்த மூன்று ஊடக நிறுவனங்கள் மீதான அமெரிக்க அதிபரின் தடை, அரசியலமைப்புக்கு முரணானது என்று நீதிபதி தெரிவித்தார்.

மேலும், சிஎன்என், எம்எஸ் நவ் மற்றும் பொலிடிகோ ஆகிய ஊடக நிறுவனங்களின் பத்திரிகையாளர்களுக்கு வெள்ளை மாளிகைக்குள் மீண்டும் அனுமதி வழங்குமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சீனா - அமெரிக்கா உறவில் திடீர் திருப்பம்!



வாஷிங்டன், செப். 24–

சீனாவும் அமெரிக்காவும் கூட்டாளிகளாக இருக்க வேண்டும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் கூறியுள்ளதாக சீன அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்ரம்ப்புக்கு சீன அதிபர் வைத்த இந்தக் கோரிக்கையால் சீனா – அமெரிக்கா உறவில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக புவி அரசியல் நோக்கர்களால் கூறப்படுகிறது.

பத்தாண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, சீன அதிபர் ஜி ஜின்பிங் 3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். தனி விமானம் மூலம் வாஷிங்டன் அருகே உள்ள ஜாயின்ட் பேஸ் ஆண்ட்ரூஸ் விமானப்படைத் தளத்துக்கு நேற்று வருகை தந்த ஜி ஜின்பிங்கை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நேரில் சென்று வரவேற்றார்.

இந்நிலையில், அதிபர் ஜி ஜின்பிங்கின் கருத்து செய்தியாக வெளியிட்டுள்ள சீன அரசு செய்தி நிறுவனமான Xinhua. “நமது இரண்டு நாடுகளும் போட்டியாளர்களாக இருப்பதை விட கூட்டாளிகளாக இருக்க வேண்டும். சீனா மற்றும் அமெரிக்க மக்கள் நீண்ட கால நட்புறவை கொண்டுள்ளனர்.

அதிபர் ட்ரம்ப் உடனான சந்திப்பில் இருதரப்பு உறவு மற்றும் உலகளாவிய சூழல் குறித்து பேச உள்ளோம். கூட்டாண்மை மூலம் நிலையான உறவு, எல்லைக்கு உட்பட்ட போட்டி, கையாளக்கூடிய வகையிலான கருத்து வேறுபாடு இதில் முக்கியம்” என்று தெரிவித்துள்ளது.

இதை ஏற்கும் வகையில் ட்ரம்ப் பேசியுள்ளார். சீனா மற்றும் அமெரிக்காவின் வல்லமை மிகவும் முக்கியத்துவம் கொண்டது. இது நம் இலக்குகளை அடைய உதவும். இதற்கு சரியான பாதை வகுப்பது அவசியம். இந்த கூட்டு முயற்சியின் மூலம் அதன் பலன், மக்களின் நலன் மற்றும் உலக அமைதியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் என்று நம்புவதாக அவர் கூறியதாக சீன அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## செப். 26 முதல் காலாண்டு விடுமுறை! சிறப்பு வகுப்புகளுக்கு தடை! தமிழக அரசு!!



சென்னை, செப். 24–

தமிழ்நாட்டில் மாநில பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு செப். 26 முதல் காலாண்டுத் தேர்வு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாநில பாடத்திட்டத்தில் பயிலும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு செப்டம்பர் 17 ஆம் தேதி முதல் காலாண்டுத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இன்றுடனும், 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நாளையுடனும் காலாண்டுத் தேர்வுகள் முடிவடையவுள்ளன. இந்த நிலையில், தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு செப். 26 முதல் அக். 4 வரை காலாண்டுத் தேர்வு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக்கல்வித் துறை வெளியிட்டிருக்கும் அறிக்கையில், காலாண்டுத் தேர்வு விடுமுறை காலத்தில் சிறப்பு வகுப்புகளை நடத்த தடை விதிக்கப்படுகிறது. இந்த உத்தரவை மீறி சிறப்பு வகுப்பு நடத்தி, ஏதேனும் அசம்பாவிதங்கள் நடந்தால் அதற்கு பள்ளியின் தலைமையாசிரியர்தான் முழுப் பொறுப்பு என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு நிவாரணம்?

## சமையல் எண்ணெய் சுங்க வரி குறைப்பு! மத்திய அரசு நடவடிக்கை!

### விலை குறைய வாய்ப்பு!!



புதுடெல்லி, செப். 24–

சமையல் எண்ணெய் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இறக்குமதி சுங்க வரியை மத்திய அரசு குறைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. பண்டிகைக் காலம் நெருங்கும் நிலையில், இந்த நடவடிக்கையால் பொதுமக்களின் சமையல் செலவு குறையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் சமையல் எண்ணெய் விலை இரண்டு தவணைகளாக 10 முதல் 12 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தியா தனது சமையல் எண்ணெய் தேவையில் சுமார் 60 சதவீதத்தை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்கிறது. இதனால் சர்வதேச விலை மாற்றங்கள் உள்நாட்டுச் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

வழங்கப்பட்ட செய்தியின்படி, சுத்திகரிக்கப்படாத பாமாயில் மற்றும் சோயாபீன் எண்ணெய்க்கான அடிப்படை இறக்குமதி சுங்க வரி 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத சூரியகாந்தி எண்ணெய்க்கான 10 சதவீத அடிப்படை சுங்க வரி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

மேலும், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மற்றும் சோயாபீன் எண்ணெய்க்கான சுங்க வரி 32.5 சதவீதத்திலிருந்து 27.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்க்கான வரி 22.5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது. மேற்காசியப் போர் காரணமாக உலகளவில் சமையல் எண்ணெய் விலை அதிகரித்துள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் நெருங்குவதால் விலை மேலும் உயரக்கூடும் என்ற அச்சமும் நிலவியது. இதையடுத்து, விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன.

இந்த வரிக் குறைப்பால் இறக்குமதிச் செலவு குறைந்து, அதன் பலன் சில்லறை விற்பனையிலும் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கடைகளில் எண்ணெய் விலை எவ்வளவு குறையும், எப்போது குறையும் என்பது குறித்த விவரங்கள் செய்தியில் தெரிவிக்கப்படவில்லை.

வரி குறைந்துள்ளது; சில்லறை விலை குறைவு இன்னும் எதிர்பார்ப்பாகவே உள்ளது!

## ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் மீண்டும் வான்வழித்தாக்குதல்!



பாகிஸ்தான், செப். 24–

பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது. இரு நாடுகளும் அடிக்கடி பரஸ்பர தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானில் செயல்படும் பயங்கரவாதிகள், தங்கள் மீது தாக்குதல் நடத்துவதாக பாகிஸ்தான் குற்றம்சாட்டி வருகிறது. ஆனால் ஆப்கானிஸ்தான் மறுத்து வருகிறது. கடந்த 21–ந்தேதி கிழக்கு ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் உள்ள 10 இடங்களில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல்களை நடத்தி உள்ளது. பயங்கரவாதிகள் எல்லை தாண்டி ஊடுருவ முயன்றதை பாகிஸ்தான் ராணுவம் முறியடித்த பின்னர் ஆப்கானிஸ்தானின் தலிபான் படைகள் 8 டிரோன்களை ஏவி, பாகிஸ்தான் நிலைகள் மீது தாக்குதல் நடத்த முயன்றனர் என்றும் இதையடுத்து ஆப்கானிஸ்தான் பகுதியில் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் பாகிஸ்தான் தெரிவித்து உள்ளது.

ஆப்கானிஸ்தான் ஏவிய 8 டிரோன்களும் வடமேற்கு நகரமான கோஹாட் மற்றும் எல்லை நகரமான தோர்கா மிற்குள் நுழைவதற்கு முன்பே சுட்டு வீழ்த்தி அழிக்கப்பட்டதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் இந்த தாக்குதல் குறித்து ஆப்கானிஸ்தான் உடனடியாக கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பித்தக்கது.

## ‘சூப்பர் எல் நினோ’ பேரழிவு: அடுத்த 6 மாதங்களில் 4.5 லட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம்!



உலகையே அச்சுறுத்தி வரும் எல் நினோ பருவநிலை மாற்றத்தின் காரணமாக, வரும் செப்டம்பர் 2026 முதல் பிப்ரவரி 2027 வரையிலான இடைப்பட்ட 6 மாத காலத்தில் உலகளவில் 4,50,000க்கும் அதிகமானோர் வெப்பத்தின் தாக்கம் தாங்காமல் உயிரிழக்கக்கூடும் என்று க்ளைமேட் இம்பாக்ட் லேப் நடத்திய புதிய ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது. பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் இந்த தீவிர வெப்ப மாறுபாடு, புவி வெப்பமயமாதலுடன் இணைந்து ‘சூப்பர் எல் நினோவாக’ உருவெடுத்துள்ளதே இந்த பெரும் அசாதாரண சூழ்நிலைக்கு முதன்மை காரணமாகும்.

இந்த ஆய்வு முடிவுகளின்படி, உயிரிழப்புகள் பெரும்பாலும் ஆப்பிரிக்கா, தெற்காசியா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளை உள்ளடக்கிய ‘க்ளோபல் சவுத்’ பகுதியிலேயே மிக அதிகமாக பதிவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவின் சாஹெல் பிராந்தியத்தில் மட்டும் சுமார் 66,800 கூடுதலான உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக நைஜீரியா (31,320), இந்தோனேசியா (19,251) மற்றும் சூடான் (17,430) ஆகிய நாடுகள் அதிகளவில் பாதிப்பை சந்திக்கக் கூடிய நாடுகளின் பட்டியலில் முன்னணியில் உள்ளன. எல் நினோவின் தீவிரப் போக்கினால் இந்தியாவிலும் இயல்பை விட வெப்பநிலையின் தாக்கம் கடுமையாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வரும் பிப்ரவரி 2027 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் மட்டும் சுமார் 15,800 கூடுதல் வெப்ப உயிரிழப்புகள் பதிவாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. வழக்கமாக இந்தியாவில் டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலான மாதங்களில் நிலவும் குளிர் காலத்திலும் கூட, இம்முறை வழக்கத்திற்கு மாறான அதிக வெப்பநிலை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஆய்வுக்குழு, தற்போது நிலவும் இந்த வெப்பநிலை அதிகரிப்பானது எதிர்கால புவி வெப்பமயமாதலின் ஒரு முன்மாதிரியாக உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளனர். வெப்ப அலைகள் மட்டுமின்றி, வறட்சி, காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு மற்றும் விவசாய உற்பத்தி குறைவு போன்ற பிற தீவிர பாதிப்புகளும் தொடர்ந்து அதிகரிக்கும் என்பதால், உலக நாடுகள் உடனடியாகக் கூலிங் மையங்கள் அமைத்தல், முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வெளிப்புற தொழிலாளர்களின் வேலை நேரத்தை முறைப்படுத்துதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# தலையங்கம்

மதுரை மணி
வியாழக்கிழமை 24.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 07-ம் தேதி

## வளர்ச்சி கிராமத்தின் வாசலையும் தட்டட்டும்!



ஒரு நாட்டின் வளர்ச்சியை அதன் பெருநகரங்களில் எழுந்து நிற்கும் உயரமான கட்டடங்களைக் கொண்டு மட்டும் அளந்துவிட முடியாது. படித்த இளைஞனுக்கு அவன் பிறந்த மாவட்டத்திலேயே தகுதியான வேலை கிடைக்கிறதா? ஒரு கிராமத்துப் பெண்ணால் தனது ஊரிலிருந்தே தொழில் தொடங்க முடிகிறதா? இந்தக் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்களில்தான் பொருளாதார முன்னேற்றத்தின் உண்மையான பொருள் அடங்கியிருக்கிறது.

இந்தப் பின்னணியில், பொருளாதார வளர்ச்சி பெரிய நகரங்களைக் கடந்து மாவட்டங்களுக்கும் கிராமங்களுக்கும் விரிவடைய வேண்டும்

**படிப்புக்காக ஊரை விட்டு வெளியேறுவது;**

படித்து முடித்ததும் வேலைக்காக நகரத்தை நாடுவது, கிடைக்கும் சம்பளத்தில் கணிசமான தொகையை வாடகைக்கும் போக்குவரத்துக்கும் செலவிடுவது என்ற வாழ்க்கைச் சுழற்சிக்குள் பல இளைஞர்கள் இருக்கிறார்கள். நகரத்திற்குச் செல்வது அவர்களின் விருப்பமாக இருக்கலாம். ஆனால், சொந்த ஊரில் வாய்ப்புகள் இல்லாததால் அது கட்டாயமாகிவிடக் கூடாது.

கிராமப்புற வளர்ச்சி என்றதும் சாலை, குடிநீர், தெருவிளக்கு ஆகியவற்றோடு நமது பார்வை நின்றுவிடுகிறது. இவை அடிப்படைத் தேவைகள். இவற்றுடன் தரமான இணைய இணைப்பு, தடையற்ற மின்சாரம், திறன் பயிற்சி, தொழில் தொடங்குவதற்கான கடன், சந்தை அணுகல் ஆகியவையும் சேர்ந்தால்தான் உள்ளூர் பொருளாதாரம் வலுப்பெறும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கல்வி நிறுவனங்களையும் தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் முயற்சி தேவை. வேளாண் கருவிகள், உணவுப் பதப்படுத்துதல், நீர் மேலாண்மை போன்ற உள்ளூர்த் தேவைகளுக்குத் தீர்வு காணும் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கலாம். ஆய்வகத்தில் உருவாகும் கண்டுபிடிப்பு, பயன்படும் பொருளாகவும் நிலையான தொழிலாகவும் மாறுவதற்கான உதவிகளை அரசு வழங்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப மாற்றங்களால் வேலைவாய்ப்பு குறித்த அச்சம் எழுவது இயல்பு. அதற்குத் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள் என்று இளைஞர்களிடம் சொல்வது மட்டும் போதாது. அந்தப் பயிற்சி எங்கே கிடைக்கும், அதன் செலவை யார் ஏற்பது, பயிற்சிக்குப் பிறகு என்ன வாய்ப்பு கிடைக்கும் என்பதற்கும் விடை வேண்டும். அரசுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் தொழில்துறைக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது.

அதேபோல், தொழில்நுட்பத் தற்சார்பு என்பது அறிவிப்புகளால் வந்துவிடாது. தொடர்ச்சியான ஆராய்ச்சி முதலீடும், புதிய முயற்சிகளை ஆதரிக்கும் சூழலும் அவசியம். உலகச் சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டே, இந்தியாவின் உள்நாட்டுத் தேவைகளை நிறைவேற்றும் உற்பத்தியையும் வலுப்படுத்த வேண்டும்.

சென்னையில் முதலீடு குவிவது மகிழ்ச்சிதான். அதே வாய்ப்பு மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் தென்மாவட்டங்களின் சிற்றூர்களுக்கும் சென்றடைய வேண்டும். மாவட்ட வாரியாக உருவான தரமான வேலைவாய்ப்புகளை அரசுகள் தங்கள் சாதனைக் கணக்கில் முதன்மைப்படுத்தட்டும்.

பிறந்த ஊரிலேயே உழைத்து, கண்ணியமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை இளைஞர்களுக்கு அளிப்பதே பரவலான வளர்ச்சியின் அடையாளம். அந்த இலக்கை நோக்கித் திட்டங்களும் முதலீடுகளும் நகரட்டும்!

## தொடர் சரிவில் தங்கம் விலை!



சென்னை, செப். 24–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (செப். 24, வியாழக்கிழமை) சவரனுக்கு ரூ. 1,080 குறைந்து ரூ. 1,12,000 –க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ. 135 குறைந்து ஒரு கிராம் ரூ. 14,000 –க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. கிராமுக்கு ரூ. 5 குறைந்து ஒரு கிராம் ரூ. 250 –க்கும் ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ. 2.50 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.'1

## தேர்தலில் பணப்பட்டுவாடா! அதிமுக புகார்!




சென்னை, செப். 24–

தமிழ்நாட்டில் இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில், வாக்காளர்களுக்கு தவெகவினர் பணப்பட்டுவாடா செய்வதாக இந்தியத் தேர்தல் ஆணையத்தில் அதிமுக புகார் அளித்துள்ளது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் சட்டப்பேரவை இடைத்தேர்தல் நடைபெறவுள்ளன. இந்த நிலையில், மதுராந்தகத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளருக்கு வாக்களிக்கக் கோரி, வாக்காளர்களுக்கு அக்கட்சியினர் பணப்பட்டுவாடா செய்ததாக குற்றச்சாட்டு எழுப்பியுள்ளது.

இதுதொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு அதிமுக எம்பி இன்பதுரை எழுதியிருக்கும் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது: ''மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் ஒன்றியம், ரெட்டிப்பாளையம் பகுதியில், தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு ஆதரவாக வாக்காளர்களை ஈர்க்க பெருமளவிலான பணம் விநியோகிக்கப்பட்டதாக தொலைக்காட்சி செய்திகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

இந்தப் குறிப்பிட்ட பகுதியைத் தாண்டி, மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகள் முழுவதும் இத்தகைய சட்டவிரோத பண விநியோகம் மற்றும் வாக்காளர்களை ஈர்க்கும் நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய செயல்கள் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நேரடியாகப் பாதிக்கின்றன. மேலும் இவை 'மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951'–ன் பிரிவு 123(1)–ன் கீழ் (லஞ்சம்) கடுமையான ஊழல் நடவடிக்கையாகவும், 'பாரதிய நியாய சன்ஹிதா, 2023'–ன் கீழ் தொடர்புடைய குற்றவியல் சட்டங்களின்படியும் குற்றமாகக் கருதப்படுகின்றன. தொடர்புடைய தொலைக்காட்சிச் செய்தி ஒளிபரப்புகள், சிசிடிவி காட்சிகள், கள விடியோ பதிவுகள் மற்றும் சமூக ஊடக/மின்னணு ஆதாரங்கள் ஆகியவை சிதைக்கப்படுவதற்கு அல்லது அழிக்கப்படுவதற்கு முன்பாகவே, அவற்றை உடனடியாகப் பாதுகாத்து வைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

அரசியல் பின்னணி அல்லது அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், இதில் ஈடுபட்ட குற்றவாளிகள், உடந்தையாக இருந்தவர்கள் என அனைவர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, கடுமையான குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தவெகவுக்கு ஆதரவு! ஜி.கே.வாசன்!




சென்னை, செப். 24–

அக். 6ல் நடைபெறவுள்ள மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழக கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தில் 60 ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்து துறைகளிலும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கிற அரசாக புதிய த.வெ.க. அரசு விளங்குகிறது.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜரை கொள்கைத் தலைவராக ஏற்றுக்கொண்டு செயல்படுகின்ற த.வெ.க வின் தலைவரும், தமிழக முதல்வருமான ஜோசப் விஜய், மக்களுக்கு நேர்மையான ஆட்சியை, வெளிப்படையான, ஊழலற்ற நிர்வாகத்தை கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

குறிப்பாக குறைந்த நாள்களிலேயே தமிழக மக்களுக்கு அதிக நம்பிக்கையை கொடுத்திருக்கிறார் முதல்வர் ஜோசப் விஜய்.

இதன் மூலம் காமராஜர், மக்கள் தலைவர் ஜி.கே. மூப்பனார் ஆகியோரின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு வளமான தமிழகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

எனவே புதிய த.வெ.க. அரசின் நல்ல தூய முயற்சிக்கு, நடைபெற இருக்கின்ற மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் த.வெ.க கூட்டணிக்கு தமிழ் காங்கிரஸ்(மூ) ஆதரவளிக்கிறது என்பதை த.மா.கா.(மூ) சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்த தமாகா, கடந்த 2026 ஜூன் மாதம் கூட்டணியில் இருந்து விலகியது குறிப்பிடத்தக்கது.

## வரத்துக் குறைவு! டாஸ்மாக் கடைகளில் விற்றுத் தீரும் மதுபானங்கள்!!



சென்னை, செப். 24–

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில், போதுமான அளவுக்கு மதுபானங்கள் வராததால், கடைகளில் அனைத்து வகையும் உடனேயே விற்றுத் தீர்ந்து விடுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வரத்துக் குறைந்ததால், மக்கள் கேட்கும் மதுபானங்களை கொடுக்க முடியவில்லை என்றும், சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் சுமார் 500க்கும் மேற்பட்ட டாஸ்மாக் கடைகளிலும் இதுதான் நிலை என்றும் கூறப்படுகிறது.

ஒரு சீராக மதுபானம் விநியோகம் செய்யப்படுவதில்லை, ஆர்டர் கொடுக்கும் அளவுக்கு வருவதில்லை, கடந்த ஒரு சில வாரங்களாக இந்த நிலை நீடிக்கிறது. முதலில், வாரத்துக்கு இரண்டு முறை மதுபானங்களை கொள்முதல் செய்வோம், அளவும் அதிகமாக இருக்கும், இப்போது அவ்வாறு இல்லை, ஒரு நாள் விட்டு ஒருநாள் மதுபானங்கள் வருகின்றன. ஆனால், ஆர்டர் கொடுக்கும் அளவுக்கு வராமல் குறைந்த அளவில் வருகின்றன என்கிறார்கள் ஊழியர்கள்.

இறக்கமதி செய்யும் மதுபானங்கள் விற்பனை செய்யப்படும் கடைகள் பெரும்பாலும் காலியாக உள்ளன.

சிலர், குறிப்பிட்ட மதுபானங்களை மட்டுமே வாங்குவார்கள். அதுபோன்றவர்கள் சென்னை முழுக்க சுற்றினாலும், அவர்களுக்குத் தேவையான மது வகை கிடைப்பதில்லை என்றும், ஒருசில வாரமாகவே இதுவே நீடிக்கிறது, டாஸ்மாக் ஊழியர்களிடம் கேட்டாலும் இதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை என்கிறார்கள்.

இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களை விடுங்கள், சாதாரண உள்ளூர் மதுவகைகளும் குறைவாகவே விற்பனை செய்யப்படுகினற்ன.

இது குறித்து ஒரு சில தகவல்கள் கூறுவது என்னவென்றால், சரக்குகளை இறக்குவதற்காக போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பணம் செலுத்த வேண்டாம் என்று டாஸ்மாக் ஊழியர்களுக்கு வாய் மொழியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், இந்தக் காரணத்தால், மதுபானங்கள் உரிய அளவுக்கு வந்து சேர்வதில்லை என்றும் கூறப்படுகிறது. இதுவே டாஸ்மாக் கடைகளில் நிலவும் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் 11 நிறுவனங்களிடமிருந்தும், பீர் வகைகள் 7 நிறுவனங்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்படுகிறதாம். இதுவரை இந்த நிறுவனங்களில் ஆர்டர்கள் போடுவதில் பாகுபாடு இருந்துள்ளது. அது மாற்றப்பட்டு அனைத்து நிறுவனங்களுக்கும் ஒன்று போல ஆர்டர்கள் போடப்படுவது கொண்டு வரப்பட்டதால் இந்த தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் காரணமாக இருக்கலாம் என்று கண்டறியப்பட்டு, விற்பனையாவதற்கு ஏற்ப ஆர்டர்கள் போடும் முறை மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் விரைவில் நிலைமை சரியாகலாம் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## காலை உணவில் பல்லி! 40-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதி!

திருவள்ளூர், செப். 24–

திருவள்ளூர் மாவட்டத்தில் கொட்டையூர் அரசுப் பள்ளியில் காலை உணவு சாப்பிட்ட 40–க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலை உணவில் பல்லி இருந்ததாக புகார் எழுந்துள்ளது. திருவள்ளூரை அடுத்த கொட்டை யூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்பட்டது. அந்த பள்ளியில் 40–க்கும் மேற்பட்டோர் காலை உணவு சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது. உணவு சாப்பிட்டவர்கள் சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து மயக்கமடைந்துள்ளனர். இதையடுத்து மாணவர்கள் அனைவரும் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே காலை உணவைச் சோதித்துப் பார்த்ததில் அதில் பல்லி இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பாக விசாரணையும் தொடங்கி நடைபெற்று வருகிறது.








## 12 பாவக் காரகங்கள் 7ஆம் பாவம் பலன்கள்?



கேபி ஜோதிடப்படி ஜோதிடத்தில் 7ம் பாவாம் திருமணம், துணை, கூட்டாளிகளைக் குறிக்கக்கூடிய ஸ்தானம். இங்கு ஒவ்வொரு கிரகம் என்பதால் தரக்கூடிய பலன்கள் என்ன, கிரகங்களின் காரகத்துவ பலன்கள் எப்படி இருக்கும் என தெரிந்து கொள்வோம்.

**7ஆம் பாவம்:**

7ஆம் பாவம் என்பது நிலையான பாவமாகும்.அதாவது தொடர்ந்து ஒருவர் நீண்ட காலத்திற்கு அனுப்பவகிக்க வேண்டிய அல்லது கிடைக்கவேண்டிய விஷயம். எனவே நிலையான பாவத்திற்கு கொடுப்பினை மிகவும் அவசியம். வெறும் தசா புத்தி காலங்களில் மட்டுமே கிடைக்கும் தற்காலிக நிகழ்வாக இருக்கக்கூடாது. அதாவது திருமணம் போன்ற விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமானால் கொடுப்பினை மிகவும் அவசியம். எந்த ஒரு விஷயம் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டுமோ அதற்கு கொடுப்பினை அவசியம்.7ஆம் பாவம் திருமணம், என்பதால் களத்திரக்காரகன். பெண்ணுக்கு செவ்வாயும், ஆணுக்கு சுக்கிரனும், அதேபோல் வியாபாரத்திற்குக்காரகன் புதனும் 7ஆம் பாவ காரகக்கிரகங்களாகும்.7ஆம் பாவம் என்பது லக்னத்தைக் கட்டுப்படுத்தும் பாவமாகும். அதாவது லக்னத்திற்கு இணையான ஜோடி பாவமாகும்.

1 லக்னம் ஜாதகர், 7 எதிர்பாலர் மனைவி ஆகும் . இந்த சம சப்தம பாவக் காரகங்கள் அக வாழ்க்கையில் அகக்காரகங்களைச் சிறப்படையச் செய்யும், புறக்காரகங்களில் ஒன்றை ஒன்று கட்டுப்படுத்தும். கணவன், மனைவி ஒருவரின் செயல் மற்றொருவரை சார்ந்திருப்பதால், சில கட்டுப்பாடுகள் விதிப்பதும், தவிர்க்க முடியாத நிலையில் வருவதையும் உணரலாம். 7ஆம் பாவம் 70% அகம், 30% புறம் சார்ந்த காரகங்களைக்கொண்டது.

**7ஆம் பாவம் விளக்கம்:**

7ஆம் பாவம் என்பது மனைவி, வாடிக்கையாளர்கள் மற்றும் தன்னோடு தொடர்புடைய, இணைந்து செயல்படுபவர்கள் அனைவரையும் குறிக்கும்.12 பாவங்களில் நடுவில் உள்ள பாவம் என்பதால் இந்த பாவத்திற்கு நடுநிலை, சமநிலை என்றெல்லாம் அழைக்கிறோம். அதாவது யாரோடும் நடுநிலை தவறாமல், இணைந்திருத்தல், ஒருவரை தன்னோடு இணைத்துக்கொண்டே செயல்படுதல், பேச்சு, உணவு, பழக்க வழக்கங்கள், உடல் தோற்றம் என்று அனைத்திலும் சமநிலையுடன் இருத்தல். இதற்கு இணையான, சமமான பாவம் என்ற பெயர் உண்டு.தனக்கு இணையற்ற நபர்களோடு பழக மாட்டார்கள். வாக்குவாதம் வந்தால் விலகி நிற்பார்கள்.

**7ஆம் பாவம் சிறப்பு:**

ஒரு ஜாதகத்தில் வலி வேதனைகளை தரும் பாவங்கள் 8,12 பாவங்கள் என்றால், அதை உடைக்கும் 7ஆம் பாவம் என்பதே இதன் சிறப்பு. 7ஆம் பாவம் வியாபாரம் என்னும் தொழில் என்பதால், ஒற்றைப்படை பாவங்களைத் தொடர்புப் பெற்றவர்கள் சமூகம் மற்றும் தான் சந்திக்கும் நபர்களிடம் கொண்டுள்ள பழக்கத்தை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வார்கள்.

உடலின் தட்பவெப்ப நிலையை சமமாக கொண்ட பாவம் என்பதால், சிறுநீரகம், உடலில் உள்ள வெப்பம், கழிவுப் பொருட்களை பிரித்து, உடலை சமநிலையுடன் பாதுகாப்பதை உணரலாம். உடலில் எல்லா சத்துப் பொருள்களும் சமநிலையில் இருக்கும். 3,11 திரிகோணப்பாவங்களில் உள்ள மற்றொரு பாவம் என்பதால், சீராக, சமநிலை இதன் சிறப்பு.

**7ஆம் பாவம் காரகங்கள்:**

ஜாதகரை சந்திக்கும் நபர்கள், கணவன், மனைவி, சமமான நபர்கள், ஸ்பரிச சுகங்கள், பங்குதாரர்கள், தொழில், ஜாதகரின் வெளிப்படையான குணம், மற்றவரை தன்னோடு இணைத்துக் கொள்ளுதல், பரிமாற்றத்தில் ஜாதகரோடு தொடர்புடைய அனைவரும் ஆகும். மற்றவரின் கருத்துக்கு மரியாதை, கொடுத்தல், தனித்து செயல்படாமல் எப்போதும் பிறரை சார்ந்திருத்தல், சட்டத்திற்கு புறம்பான விஷயங்களில் ஈடுபடாமல் இருத்தல், உணவுப் பழக்க வழக்கங்களில் சமநிலையை, சரிவிகிதத்தில் உருவாக்குதல், அனைவருக்கும் ஏற்ற ஆடைகளை, அதாவது வித்தியாசமாக தெரியாத ஆடைகளை அணிதல், உடலின் எடை சமமாக வைத்திருத்தல், போன்ற காரகங்கள் 7ஆம் பாவம் பெற்றுள்ளது.

தனிமை 12ஆம் பாவம், வலி வேதனை 8ம் பாவம் இவற்றின் காரகங்களுக்கு எதிரான காரகங்களை கொண்டது 7ஆம் பாவம். எனவே அவற்றை உடைக்கும் உன்னத பாவமாகும். 6ஆம் பாவக் காரகங்கள் லக்னத்தை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் வளர விடாது. அதாவது,7ஆம் பாவத்திற்கு 2ஆம் பாவம், 7லிருந்து எண்ணி வரும் இரண்டாம் பாவம் ஓரளவுக்கு மேல் வளராது எனவே 6ஆம் பாவம் நோய்க் கிருமிகளை குறிப்பிட்ட நிலைக்கு மேல் வளர விடாது.

**7ஆம் பாவம் உறுப்புகள்:**

உடற்கூறில் 7ஆம் பாவம் அடிவயிறு, உடலின் நடுப்பகுதி, தொப்புள், சிறுநீரகம், கர்ப்பப்பை, (கிட்னி) இரத்தத்திலிருந்து நீரையும் கொழுப்பையும் பிரித்தெடுத்து, சுத்தப்படுத்தி உடலை சம நிலையுடன் பாதுகாக்கும் கிட்னி 7ஆம் பாவமாகும். 8ஆம் பாவத்தால் ஏற்படும் உறுப்பு, மாறுதல், இயக்கம் மாறுதல், எதிர்மறையாக உறுப்புகள் செயல்படுதல் போன்றவை 7ஆம் பாவத்தைத் தொடர்பு பெற்றால் பிரச்சனை இருக்காது. அதாவது உடல் ஊனம் இருக்காது.

**7ஆம் பாவம் தொடர்புகள்**

7ஆம் பாவம் தான் நின்ற நட்சத்திரம் உபநட்சத்திரம் வாயிலாக 1,3,7,11 போன்ற பாவங்களைத் தொடர்புப் பெற்றால் பெரிய நஷ்டம் வராது.அதாவதுதொழில் என்ற 10ஆம் பாவத்திற்கு சாதகமற்ற பாவங்கள் இவை என்றாலும், இவை 10ஆம் பாவத்தை கெடுக்காதவை, அதே சமயம் வலி வேதனைகளைத் தரும் 4,8,12 ஆம் பாவங்களுக்கு, 3,7,11ஆம் பாவங்கள் 4,8,12ஆம் பாவங்களாக வருவதால் அவை முற்றிலும் தவிர்க்கப்படும்.

இவை பெரிய நஷ்டம், தொழில் வீழ்ச்சியைத் தராது. 3,7,11 திரிகோணங்கள், 2,6,10 திரிகோணங்களுக்கு,முறையே 2,6,10 ஆம் பாவங்களாகவே வருவதால், இவை நடுநிலையான பொருளாதார அமைப்பை கொடுக்கும். அகத்திற்கும், புறத்திற்கும் சிறப்பான பாவமாக இருக்கும்.

**7ஆம் பாவம் தொடர்பு பலன்கள்**

7ஆம் பாவம் 5,9 பாவங்களைத் தொடர்புப் பெற்றால், இவை 10 ஆம் பாவத்திலிருந்து எண்ணிவர இவை 8,12 பாவங்களாக அதாவது அந்தபாவக்காரகங்களுக்கு,எதிராக இருப்பதால் தொழிலுக்கு சிறப்பான பாவங்கள் அல்ல. 5,9 பாவங்களில் உள்ள காதல்,கேளிக்கை பொழுதுபோக்கு விளையாட்டு விஷயங்கள், தான தர்ம சிந்தனை தொழிலுக்கு வீழ்ச்சியைக் கொடுக்கும்.

மனைவியை காதலிப்பார். வேறு பெண் தொடர்பு அல்லது இரண்டாம் திருமணம் போன்ற உணர்வுகள் சார்ந்த வற்றிற்கு வாய்ப்புகள் இருக்கலாம், ஆனால் அவை லக்னம், தசா புத்தி அமைப்பைச் சார்ந்தது.

7ஆம் பாவம் 2,4,6,10 பாவங்களைத் தொடர்புப் பெற்றால், 7ஆம் பாவத்தின் 2,6 தொடர்புகள் மூலமாக ஜாதகருக்கு அதிகளவில் வருமானம் வரும். ஏனெனில் 2,6ஆம் பாவங்கள் 7ஆம் பாவ வாடிக்கையாளருக்கு 8,12 பாவங்கள் என்பதனை உணரலாம்.எனவே வாடிக்கையாளர் நஷ்டம் இவருக்கு லாபம் தரும்.7ஆம் பாவத்தின் 4,10ஆம் பாவத் தொடர்புகள் மிகவும் சிறப்பு. இவை ஜாதகருக்கும், வாடிக்கையாளருக்கும் தொழில் ரீதியில் தனநிலை உயர்வைத் தரும்.

7ஆம் பாவம் 8,12 பாவங்களைத் தொடர்பு;

7ஆம் பாவத்தின் 2,6 தொடர்புகள் களத்திரத்திற்கு 8,12 ஆக வருவதால், ஜாதகர் மனைவியை அடக்கி ஆள்வார். 7ஆம் பாவத்தின் 2ஆம் பாவத்தொடர்பு என்பது ஜாதகரின் பேச்சால் வாழ்க்கைத் துணைக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும்.

7ஆம் பாவம் 8,12 பாவங்களைத் தொடர்புப் பெற்றால், இவை ஜாதகருக்கு 8,12 ஆகவும், 7ஆம் பாவத்திற்கு(எதிர்பாலர்) 2,6 பாவங்களாகவும் வருவதால், ஜாதகருக்கு பொருள் இழப்பையும், வாடிக்கையாளருக்கு அபரிதமான லாபமும் ஏற்படும். மனைவி மூலம் வலி வேதனைகளை உண்டாகும். மனைவி நிறைய பணம் நஷ்ட ஈடாக கிடைக்கும்.

7ஆம் பாவத்தின் 8,12 தொடர்பு ஜாதகரின் திருமண முறிவு என்பதனை காட்டுகிறது. ஜாதகர் வலி, வேதனை அவமானங்கள் அடைந்து, பிரிவதைக் காட்டுகிறது. ஜாதகர் தன் வாழ்க்கை துணைக்கு ஒரு பெரிய தொகையை இழப்பீடாக தர வேண்டி வரும். 7ஆம் பாவம் 8 ஆம் பாவத்தை மட்டும் தொடர்பு கொண்டால், ஜாதகருக்கு விவாகரத்தும் கிடைக்காது. மாட்டிக் கொண்ட நிலைதான் ஏற்படும்.7ஆம் பாவம் 12ஆம் பாவத்தைத் தொடர்புப் பெற்றால் எல்லோரிடமும் தோற்றுப் போதல், சட்டத்திற்கு முன்னால் அசிங்கம் அவமானம் அடைதல் போன்ற கௌரவ இழப்பு ஏற்படும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# காலை உணவுக்கு புரதச்சத்து நிறைந்த சாலட்!



காலை உணவில் புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த உணவுகளைச் சேர்ப்பது வயிறு நிறைந்த உணர்வைத் தரும். காய்கறிகள், ராஜ்மா, கொண்டைக்கடலை, பன்னீர் மற்றும் வேர்க்கடலை சேர்த்த சாலட், சைவ உணவை விரும்புபவர்களுக்கு எளிய காலை உணவுத் தேர்வாகும். உடற்பயிற்சி செய்பவர்கள், தினசரி உணவில் ஊட்டச்சத்துகளை அதிகரிக்க விரும்புபவர்கள் இதைத் தயாரிக்கலாம்.

இதற்கு வெள்ளரிக்காய், முள்ளங்கி, தக்காளி, வெங்காயம், லெட்டூஸ், சிவப்பு மற்றும் மஞ்சள் குடைமிளகாய், ப்ரோக்கோலி ஆகியவற்றை நன்றாகக் கழுவி நறுக்கிக்கொள்ளவும். கால் கப் வேகவைத்த ராஜ்மா, கால் கப் வேகவைத்த கொண்டைக்கடலை, ஒரு கைப்பிடி வறுத்த வேர்க்கடலை மற்றும் 70 கிராம் பன்னீர் எடுத்துக்கொள்ளவும். ப்ரோக்கோலி, குடைமிளகாயை லேசாக ஆவியில் வேகவைக்கலாம்.

பெரிய பாத்திரத்தில் காய்கறிகள், பயறு வகைகள், வேர்க்கடலை மற்றும் துண்டுகளாக்கிய பன்னீரைச் சேர்க்கவும். தனியாக எலுமிச்சைச் சாறு, ஆலிவ் எண்ணெய், உப்பு, நசுக்கிய மிளகு ஆகியவற்றைக் கலந்து சாலட்டின் மீது ஊற்றவும். அனைத்தையும் நன்றாகக் கிளறி, கொத்தமல்லி தூவினால் சாலட் தயார்.

ராஜ்மா, கொண்டைக்கடலை, பன்னீர் புரதச்சத்தை வழங்குகின்றன. காய்கறிகள் நார்ச்சத்து, வைட்டமின்கள் மற்றும் தாதுக்களை அளிக்கின்றன. வேர்க்கடலை, ஆலிவ் எண்ணெய் கொழுப்புச் சத்தையும் சேர்க்கின்றன. வீட்டில் கிடைக்கும் காய்கறிகள் மற்றும் பயறு வகைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் முழுதானிய பிரெட்டையும் உடன் சேர்த்துக்கொள்ளலாம்.

பன்னீரைச் சேர்ப்பதற்கு முன் இரண்டு முதல் மூன்று நிமிடங்கள் வெந்நீரில் ஊறவைத்து வடிகட்டலாம். எலுமிச்சைச் சாறு, உப்பு, மிளகு அளவைச் சுவைக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம்.

# ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி பொது பேரவை கூட்டம்!



ஈரோடு, செப். 24–

ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 46–வது பொதுப் பேரவை கூட்டம் நடைபெற்றது ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் கே.வி.எஸ். குமார் அவர்கள் 46–ஆவது பொதுப்பேரவை ஆண்டறிக் கையினை வெளியிட்டு தலைமையுரை ஆற்றினார்.

தமிழகத்தில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் 4–வது பெரிய வங்கியாக திழ்கிறது என்றும், மாநிலத்திலேயே 1,14,747 விவசாயிளுக்கு வட்டியில்லோ பயிர்க்கடன் ரூ.1564 கோடியும், 22,430 விவசாயிளுக்கு ரூ.164 நடைமுறை மூலதனக் கடன்களையும் , 5,262 விவசாயிகளுக்கு ரூ.52 ரைரோடி அளவில் மத்தியகாலக் கடன்களை வழங்கியும், மகளிர் சுயஉதவிக் குழுக்ளுக்கு (SHG) ரூ.312 கோடியும் நேரடி நகைக்கடனாக 1012 கோடியும் வழங்கி தமிழகத்தின் முத ன்மை வங்கியாக திகழ்ந்து வருகிறது. 2025–26–ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட கடன்களில் பயிர்க்கடன் 99%–மும், அனைத்துவகை கடன்களில் 98%–மும் சிறந்த முவறயில் வசூல் செய்தும், நிகர செயல்படாத ஆஸ்திகளின் மதிப்பு (Net NPA) 0.05%–ஆக குறைத்து, மாநிலத்திலேயே “Best Performance in NPA Management”– விருதினையும், வங்கி பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்திட எதுவாக விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையம் ACSTI சென்னைக்கு அதிக பணியாளர்களை அனுப்பி வைத்ததற்காக மாநிலத்தில் 3–வது மத்திய கூட்டுறவுக்கான விருதினையும், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெற்றுள்ளது.

சுய உதவிக் குழுக்களுக்கு அதிகளவில் கடன் வழங்கியமைக்கு Performance Award”– 15.08.2026 மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது எனவும்,

வங்கியானது நடப்பு ஆண்டில் ரூ.15.02 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது என்று தெரிவித்தார்கள்.

இவ்விழாவில் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைப்பதிவாளர் /முதன்மை வருவாய் அலுவலர் பெ. பிரகாஷ், வேளாண்மை உதவி இயக்குனர் சிவகுமார், இணைப்பதிவாளர் ப. கந்தராஜா, மேலாண் இயக்குனர் த. செல்வகுமாரன், கோபி சரக துணைப்பதிவாளர் செ. குமாரிமோகனா உள்ளிட்ட கூட்டுறவு சங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# வேலை வாய்ப்பு
## ரயில்வேயில் 1,688 பணியிடங்கள்!

ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தின் (RRB) தொழில்நுட்பம் சாராத இளநிலைப் பணிப் பிரிவில் (NTPC Under Graduate Level) மொத்தம் 1,688 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற தகுதியானவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

அறிவிப்பு எண் 07/2026–ன் கீழ் நிரப்பப்பட உள்ள இப்பணியிடங்களுக்கான விண்ணப்பப் பதிவு 15.10.2026 அன்று தொடங்குகிறது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க 13.11.2026 இரவு 11.59 மணி கடைசி நேரமாகும். தேர்வு செய்யப்படுபவர்கள் இந்தியா முழுவதும் உள்ள ரயில்வேப் பிரிவுகளில் நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.

பணியிடங்கள் மற்றும் கல்வித்தகுதி

பதவி கல்வித்தகுதி மாத ஊதியம்

வணிகம் மற்றும் பயணச்சீட்டு எழுத்தர் (Commercial Ticket Clerk) பிளஸ் 2 தேர்ச்சி ரூ.21,700

கணக்கு எழுத்தர் மற்றும் தட்டச்சர் (Accounts Clerk Typist) பிளஸ் 2 தேர்ச்சியுடன் கணினியில் ஆங்கிலம் அல்லது இந்தியில் தட்டச்சுத் திறன் ரூ.19,900

இளநிலை எழுத்தர் மற்றும் தட்டச்சர் (Junior Clerk Typist) பிளஸ் 2 தேர்ச்சியுடன் கணினியில் ஆங்கிலம் அல்லது இந்தியில் தட்டச்சுத் திறன் ரூ.19,900

ரயில் எழுத்தர் (Trains Clerk) பிளஸ் 2 தேர்ச்சி ரூ.19,900

மொத்தக் காலியிடங்கள்: 1,688. பதவி வாரியான மற்றும் ரயில்வே மண்டல வாரியான காலியிட விவரங்களை விரிவான அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்க வேண்டும்.

**வயது வரம்பு**

01.01.2027 நிலவரப்படி விண்ணப்பதாரர்கள் 18 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.

அதிகபட்ச வயது வரம்பில் வழங்கப்படும் தளர்வுகள்:

எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு 5 ஆண்டுகள்.

ஓ.பி.சி. — கிரீமிலேயர் அல்லாத பிரிவினருக்கு 3 ஆண்டுகள்.

மாற்றுத்திறனாளிகளில் பொதுப்பிரிவினருக்கு 10 ஆண்டுகள், ஓ.பி.சி. பிரிவினருக்கு 13 ஆண்டுகள், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு 15 ஆண்டுகள்.

முன்னாள் ராணுவத்தினருக்கு அரசு விதிகளின்படி வயதுத் தளர்வு.

**தேர்வு முறை**

முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கணினிவழித் தேர்வுகள் நடத்தப்படும். பதவிக்குப் பொருந்தும் திறன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். பதவி வாரியான தேர்வு நடைமுறைகளை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

**விண்ணப்பக் கட்டணம்**

மாற்றுத்திறனாளிகள், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர், பெண்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு (EBC) விண்ணப்பக் கட்டணம் ரூ.250. பிற விண்ணப்பதாரர்களுக்கு ரூ.500.

வழங்கப்பட்ட தகவலின்படி, ரூ.250 கட்டணம் செலுத்துவோருக்கு ரூ.250–ம், ரூ.500 கட்டணம் செலுத்துவோருக்கு ரூ.400–ம் திரும்ப வழங்கப்படும். இதற்கான நிபந்தனைகளை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்க வேண்டும். கட்டணத்தை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

தகுதியானவர்கள் ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தின் அதிகாரப்பூர்வ விண்ணப்ப இணையதளத்தில் விரிவான அறிவிப்பைப் படித்து, கல்வித்தகுதி, வயது வரம்பு உள்ளிட்ட நிபந்தனைகளை உறுதிசெய்த பின்னர் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்தில் தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களைப் பதிவேற்றி, கட்டணத்தைச் செலுத்த வேண்டும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் நகலை எதிர்காலப் பயன்பாட்டிற்காகச் சேமித்துக்கொள்ளவும்.

**முக்கிய தேதிகள்**

விண்ணப்பப் பதிவு தொடக்கம்: 15.10.2026

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: 13.11.2026, இரவு 11.59 மணி

அதிகாரப்பூர்வ இணையதளம்: rrbapply.gov.in

குறிப்பு: இச்செய்தி வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. அறிவிப்பு எண், காலியிடங்கள், விண்ணப்பத் தேதிகள் மற்றும் தேர்வு விதிமுறைகள் அதிகாரப்பூர்வமாகச் சரிபார்க்கப்படவில்லை. விண்ணப்பிப்பதற்கு முன் ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பைச் சரிபார்க்கவும்

# நூதன முறையில் ‘செல்ஃபி பாயிண்ட்’ அமைத்து குப்பை தரம் பிரிப்பு விழிப்புணர்வு!



ராமநாதபுரம், செப். 24–

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சி சார்பில், பொதுமக்களிடையே குப்பைகளை நான்கு வகைகளாக முறையாகத் தரம் பிரித்து வழங்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நூதன முறையில் ‘செல்ஃபி பாயிண்ட்’ அமைத்து விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

கீழக்கரை நகராட்சியில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில், பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை, சானிட்டரி கழிவு மற்றும் அபாயகரமான கழிவு என நான்கு வகைகளாகத் தரம் பிரித்து, நகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் முறையாக வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

# தங்கக் கடன் வட்டி உயருமா?



சென்னை, செப். 24–

அக்டோபர் மாத ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை முடிவைத் தொடர்ந்து தங்கக் கடன் வட்டி மாறக்கூடும் எனச் செய்தி வெளியாகியுள்ளது. வட்டி உயர்வு இன்னும் உறுதியாகவில்லை. ரெப்போ விகிதம் உயர்த்தப்பட்டால், அதனுடன் இணைக்கப்பட்ட மிதக்கும் வட்டித் தங்கக் கடன்களின் வட்டி, ஒப்பந்த விதிகளுக்கு ஏற்ப அதிகரிக்கலாம். நிலையான வட்டிக் கடன்களுக்கு ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பொதுவாக மாற்றம் இருக்காது.

புதிய கடன்களுக்கான வட்டி, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் முடிவைப் பொறுத்து அமையும்.

# பெருமாள் கோவில் பிரம்மோற்சவ தேரோட்டம்!



ஈரோடு, செப். 24–

ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாதர்(பெருமாள்) கோயிலில் நடந்த பிரம்மோற்சவ தேரோட்டத்தில், ஈரோடு மேற்கு தொகுதி எம்எல்ஏ ஆனந்தமோகன், அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியம், செயல் அலுவலர் சுரேந்தர், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் வைபவ் செல்வம், அறங்காவலர் சுந்தர்ராஜ், நகைக்கடை ராஜா, ஆகியோர் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்து இழுத்தனர். நடப்பாண்டுக்கான தேர்த்திருவிழா கடந்த 16ம் தேதி இரவு கிராமசாந்தி பூஜையுடன் துவங்கியது. தொடர்ந்து, 17ம் தேதி கோயில் வளாகத்தில் கொடிமரத்தில் விழா கொடியேற்றம் செய்யப்பட்டது. இதையடுத்து ஒவ்வொரு நாள் இரவும் அன்னபட்சி வாகனம், சிம்ம வாகனம், அனுமந்த வாகனம், கருட வாகனம், யானை வாகனம் போன்றவற்றில் பெருமாள் எழுந்தருளி, வீதி உலா சிறப்பாக நடைபெற்றது. இதில், நேற்று முன்தினம் மாலை ஸ்ரீதேவி, பூதேவியுடன் கஸ்தூரி அரங்கநாத ருக்கு திருக்கல்யாண உற்சவமும், இதையடுத்து மலர் பல்லக்கில் சுவாமி வீதி உலாவும் விமர்சையாக நடந்தது. இந்நிலையில், விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெற்றது.



நடைபெற உள்ள தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டிவிடும் திமுக வேட்பாளர் சுகன்யா அவர்களை ஆதரித்து திருப்பூர் மத்திய மாவட்ட பெரிச்சி பாளையம் பகுதி செயலாளர் தம்பி குமாரசாமி தலைமையில் கழக நிர்வாகிகள் தாராபுரத்தில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபடும் போது உடன் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்



தேனி மாவட்டம்ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட தொழில் மையம் சார்பில்புதிய தொழில்முனைவோர், தொழில்நிறுவன மேம்பாட்டு திட்டம் மற்றும் அன்னல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆகிய திட்டங்களில் பயன்பெறும் வகையில் தேர்வு குழுவின் மூலம் பயனாளிகள் தேர்வு செய்வதற்கான நேர்கானல் மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

# கீழக்கரையில் டெங்கு தடுப்புப் பணிகள் தீவிரம்!



ராமநாதபுரம், செப். 24–

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சியில் டெங்கு தடுப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதில் 20 களப்பணியாளர்களும், 2 கொசு மருந்து தெளிப்பாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் ஆய்வு செய்து, கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்படுகின்றன. ஆறு நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் புகை மருந்துப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மருத்துவமனைகளிலிருந்து காய்ச்சல் நோயாளிகளின் விவரங்கள் பெறப்பட்டு, பாதிப்பு அதிகமுள்ள பகுதிகளில் கூடுதல் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுகாதாரத் துறையுடன் இணைந்து பொதுமக்களுக்கு டெங்கு தடுப்பு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருவதாக நகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சினிமா துளிகள்..!



# தனுஷின் ‘ஓம்’ பட வெளியீடு ஒத்திவைப்பு!



அக்டோபர் 16 அன்று வெளியாகவிருந்த ‘ஓம்’ திரைப்படத்தின் வெளியீடு ஒத்திவைக்கப்படுவதாக தனுஷ் அறிவித்துள்ளார்.

அக்டோபர் 15–ல் வெளியாகும் ரஜினிகாந்தின் ‘ஜெயிலர் 2’ படத்துக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். சூர்யாவின் படம் தீபாவளிக்கு வெளியாக இருப்பதால், அன்றும் ‘ஓம்’ வெளியாகாது எனக் கூறியுள்ளார்.

ராஜ்குமார் பெரியசாமி இயக்கியுள்ள இப்படத்தின் புதிய வெளியீட்டுத் தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

# பழனியில் சோழிய வேளாளர் சங்கம் சார்பில் கல்வித் திருவிழா!



பழனி செப்டம்பர் 24–

பழனியில் சோழிய வேளாளர் சங்கம் சார்பில் கல்வித் திருவிழா நடைபெற்றது. பழனி அடிவாரம் அரிமா எஸ் பெருமாள் அரங்கில் பழனி அடிவாரம் சோழிய வேளாளர் சங்கம் சார்பில் 47 ஆம் ஆண்டு மகாசபை கூட்டமும், கல்வித் திருவிழாவும் நடைபெற்றது.

இதற்கு மூத்த உறுப்பினர் நாட்ராயசாமி தலைமை வகித்தார். தலைவர் அரிமா பிரமுகர் எஸ் பி அசோக்பெருமாள் முன்னிலை வகித்தார்.

முன்னாள் கவுன்சிலர் துரை செல்லப்பாண்டியன், உ.கார்த்திகேயன் ஆகியோர் வரவேற்றனர். கூட்டத்தில் 10 மற்றும் பிளஸ் டூ மாணவ மாணவியர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது. அதை சரவணப் பொய்கை கந்த விலாஸ் அதிபர் என் பாஸ்கரன் மற்றும் தலைவர் எஸ் பி அசோக் பெருமாள், பேச்சியம்மாள் ரைஸ்மில் அதிபர் சுப்பிரமணியம், சண்முகவேல் மண்டபம் அதிபர் ரவிச்சந்திரன், எஸ் சுந்தர் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவில் பழனி வ உ சி மன்றம் நிர்வாகிகள் எஸ்.சுந்தர், எம் எஸ் குகன், சுவாமி விலாஸ் முருகேசன், ஒர்க் ஷாப் பாலு, துர்கா கணேசன், எம் சரண்ராஜ், பாண்டிய வேளாளர் சங்கம் முருகன், முன்னாள் கவுன்சிலர் சுராங்கனி கணேசன், ஆர் பழனி முருகன், தமிழ் மாநில காங்கிரஸ் நகர தலைவர் சண்முகநாதன், மீனாட்சி ராஜன், அதிமுக கவுன்சிலர் ஆறுமுகம், அதிமுக பிரமுகர்கள் ராம்பாபு, குகன், சரவணன், எஸ் கே பாபு, ஆர் எம் டி சி கதிர்வேல், மற்றும் ஆருத்ரா ஈஸ்வரன், வழக்கறிஞர்கள் குமரேசன், செந்தில்குமார், கோல்டன் மாசிலாமணி காளியப்பன், கோல்டன் ஸ்டுடியோ பாலு, மானூர் ரமேஷ், கமலம் ஹோட்டல் அதிபர் சுப்புராஜ், சிலம்பம் ரவிக்குமார், இன்ஜினியர் திருஞானம், ஆசிரியர் ராஜபாண்டியன், சமையல் காண்ட்ராக்டர் பகவதி, நாகு ஜி, வீரக்குமார் உள்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர். மாணவியர்கள் மகாலட்சுமி கவிதாஞ்சலி உட்பட பத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கல்வி பரிசுகள் பெற்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# சபரிமலையில் தங்கக் கிரீடம் மாயம்!



திருவனந்தபுரம், செப். 24–

சபரிமலை அய்யப்பன் கோவில் பாதுகாப்பு அறையில் இருந்த 55.72 சவரன் தங்கக் கிரீடத்துக்குப் பதிலாக போலிக் கிரீடம் வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. 2012 ஆகஸ்டில் தமிழக பக்தர்கள் வழங்கிய 445.76 கிராம் கிரீடத்தின் வடிவில், எடை குறைந்த போலிக் கிரீடம் இருப்பது விசாரணையில் தெரியவந்ததாகக் கூறப்படுகிறது. பாதுகாப்பு அறையில் சிசிடிவி இல்லாத நிலையில், அசல் கிரீடம் காணாமல் போனது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.



## இன்றைய கார்ட்டூன்




# மவுனம் காக்கும் அஜித்...புதிய அரசியல் கட்சிகளை தொடங்கி வரும் ரசிகர்கள்!

சென்னை, செப். 24–

நாளுக்கு நாள் அஜித் அரசியலுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கை ரசிகர்களிடையே தீவிரமடைந்துள்ளது. உளுந்தூர்பேட்டையில் முதலில் புதிய கட்சியை தொடங்கிய அஜித் ரசிகர்கள், தற்போது குன்றத்தூரில் 2வதாக புதிய கட்சியை தொடங்கி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



**அநமுக**

முதல்–அமைச்சர் விஜய்யை போன்று நடிகர் அஜித்தும் கட்சி தொடங்கி அரசியலுக்கு வர வேண்டும் என்று அவரது ரசிகர்கள் விருப்பம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் காஞ்சீபுரம் மாவட்டம் குன்றத்தூரில் நடிகர் அஜித் ரசிகர்கள் 'அனைத்து நண்பர்கள் முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியை தொடங்கியுள்ளனர்.

**நாளைய முதல்வரே**

இதையொட்டி குன்றத்தூரில் நடைபெற்ற கட்சியின் முதல் நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 100–க்கும் மேற்பட்ட அஜித் ரசிகர்கள் பங்கேற்றனர். நாளைய முதல்வரே பதவியேற்க வா என்ற வாசகங்கள் அடங்கிய பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. அதேபோல் நடிகர் அஜித் புகைப்படத்துக்கு பாலாபிஷேகம் செய்து நாளைய முதல்வர் அஜித் என கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் கட்சியின் தலைவர் பாபு கட்சி கொடியை அறிமுப்படுத்தினார். கட்சியின் சின்னமாக காரை அறிவித்தார். அதை தொடர்ந்து கட்சி நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. பின்னர் கட்சியின் தலைவர் பாபு நிருபர்க ளிடம் கூறுகையில், நடிகர் அஜித்தை 2031–ம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல்–அமைச்சராக்கும் லட்சியத்துடன் கட்சி தொடங்கப்பட்டுள்ளது.

**நடிகர் அஜித் அரசியலுக்கு வர வேண்டும்**

அஜித் ரசிகர்கள் ஒன்றிணைந்து மக்கள் நலனுக்காக பல்வேறு நலப்பணிகளை மாவட்ட வாரியாக நகரம், ஊராட்சி வாரியாக செய்ய வேண் டும். நடிகர் அஜித் அரசியலுக்கு வர வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு பிரார்த்தனை களில் ஈடுபட்டு வருகிறேன், என்றார்.

சில நாட்களுக்கு முன்னர் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே அஜித் ரசிகர்கள் புதிதாக (தமக) என்ற கட்சி தொடங்கி கொடியையும் அறிமுகப்படுத்தி னர் என்பது குறிப்பிடத்தக்கது. அஜித் ரசிகர்களின் இதுபோன்ற செயல்களால் தமிழக அரசியல் களம் சூடு பிடித்துள்ளது.

**நடிகர் அஜித் மவுனம்**

நடிகரும் ரேஸருமான அஜித் குமார், திரைப்படங்களில் நடித்துக் கொண்டும் இடையில் கார் பந்தயங்களிலும் பங்கேற்று வருகிறார். நடிகர் அஜித் அரசியலுக்கு வர மாட்டேன் என்றும், தமக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் துளியளவும் இல்லை என்றும் பல முறை பொதுவெளியில் தெளிவுபடுத்தியுள்ளார். எனினும் அவரது அரசியல் பிரவேசம் குறித்தான விவாதங்கள் தமிழ்நாட்டில் அவ்வப்போது எதிரொலித்து வருகிறது. ஆனால் இதுவரை அஜித் எந்தவொரு அரசியல் சார்ந்த கருத்தையும் வெளிப்படுத்தியதில்லை. ரசிகர்கள் தொடர்ந்து அரசியல் கட்சிகளை தொடங்கி வரும் நிலையில், அஜித்குமார் தரப்பில் இருந்து எந்த பதிலும் அதிகாரப்பூர்வமாக வரவில்லை தொடர்ந்து இந்த விவகாரத்தில் நடிகர் அஜித் மவுனம் காத்து வருவதாக கூறப்படுகிறது.

# எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தவர்கள் இடைத்தேர்தலில் போட்டியிட தடை கோரிய வழக்கு தள்ளுபடி!

சென்னை, செப். 24–

சென்னை ஐகோர்ட்டில் சைதாப்பேட்டையை சேர்ந்த வழக்கறிஞர் சுதன் என்பவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், தேர்தல் முடிவுகள் வெளியான குறுகிய காலத்தில், மக்கள் தீர்ப்பை புறக்கணித்து அரசியல் காரணங்களுக்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ததால், இடைத்தேர்தலில் அவர்கள் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யும்போது,



தேர்தல் செலவை டெபாசிட் செய்யும் வகையில் உரிய நடைமுறையை வகுக்கும் படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். மேலும் இந்த வழக்கு முடியும் வரை மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த தடை விதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், எந்த காரணமும் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு வாரங்களில் ராஜினாமா செய்துவிட்டு, வேறொரு கட்சியில் வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுகின்றனர்;

இடைத்தேர்தல் செலவுக்கு பொறுப்பாக்கும் வகையில் தேர்தல் செலவை வசூலிக்க வேண்டும்; அதற்கு எந்த சட்டமும் இல்லாததால், நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க முடியும்; சட்டத்திருத்தம் கொண்டுவராவிட்டால், ஒட்டுமொத்தமாக அனைத்து எம்.எம்.ஏ.க்கள் ராஜினாமா செய்தால் என்னாவது என வாதிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் தரப்பில், தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, தங்களுக்கு எந்த பங்கும் இல்லை; இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல என சுட்டிக்காட்டப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிமன்றம், "நீதிமன்றம் சட்டத்திருத்தம் கொண்டுவர முடியுமா? நாடாளுமன்றம்தான் சட்டம் இயற்ற முடியும்." என மனுதாரருக்கு கேள்வி எழுப்பியதுடன், வழக்கின் மீதான தீர்ப்பை தள்ளிவைத்திருந்தனர்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த தலைமை நீதிபதி அமர்வு, வழக்கறிஞர் சுதனின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது. மேலும், சட்டம் இயற்றுவது என்பது நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தபட்ட விவகாரம் என்று நீதிபதிகள் உத்தரவில் விளக்கம் அளித்துள்ளனர்.

# பழனிவேல் தியாகராஜனுக்கு என் மீது தனிப்பட்ட ஈகோ - அமைச்சர் நிர்மல்குமார்!

சென்னை, செப். 24–

மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–



மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்த முடிவெடுத்து வைத்திருந்தனர். தற்போது ஓட்டை பிரிப்பதற்காக தான் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தனித்தனி வேட்பாளர்களை நிறுத்தி உள்ளனர்.

இடைத்தேர்தலில் த.வெ.க.வுக்கு எந்த பின்னடைவும் இல்லை. அ.தி.மு.க. கட்சியின் நிலை காரணமாகவே அவர்கள் ராஜினாமா செய்தனர். எடப்பாடி பழனிசாமி தன் சுயநலத்திற்காக தி.மு.க.வை ஆதரிப்போம் என்று சொன்னால் யார் ஏற்றுக்கொள்வர்?. மக்கள் ஆதரவளித்தவர்கள் உடன் சேர்ந்து பயணிப்போம் என முடிவெடுத்து ராஜினாமா செய்ததில் எந்த தவறும் இல்லை.

அ.தி.மு.க.வை சீர்குலைத்து, தி.மு.க.வுக்கு முட்டு கொடுகிறார் எடப்பாடி பழனிசாமி. எடப்பாடி பழனிசாமி தி.மு.க.வுடன் செல்லும் முடிவை எடுக்காமல் இருந்திருந்தால் யாரும் ராஜினாமா செய்திருக்கமாட்டார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் என் தலையீடு இல்லை. கோவில் குடமுழுக்கில் பி.டி.ஆர்.குடும்பம் புறக்கணிக்கப்படவில்லை. பழனிவேல் தியாகராஜனின் தாய் ருக்மணியை நன்றாக தான் கவனித்துக்கொண்டோம்.

கோவிலைக் கட்டிய பாண்டிய மன்னனை விட பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் அதிகமாக பேசுகிறார். பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பி.டி.ஆர். டிரஸ்ட் தொடர்புடைய திருமண மண்டபத்தை 3 ஆண்டாக முடக்கி வைத்திருந்தார். பழனிவேல் தியாகராஜன் முடக்கிய மண்டபத்தை திறந்து வைக்க நான் உதவியதால் என் மீது அவருக்கு தனிப்பட்ட ஈகோ.

தி.மு.க. ஆட்சியில் ஒரு குடும்பம் ரூ.30,000 கோடி ஊழல் என பழனிவேல் தியாகராஜன் பேசிய ஆடியோ வெளியானது. நிதியமைச்சராக செயல்பட்டிருந்தால் தி.மு.க. ஆட்சியில் பி.டி.ஆர். ஏன் ஒதுக்கப்பட்டார்? ஆடியோ டெஸ்டுக்கு அவர் தயாரா?. இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தல் ஆணையர்கள் கருத்து மோதலா? ஆணையம் விளக்கம்!

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) தொடர்பான பல்வேறு முடிவுகள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கும், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருக்கும் இடையே கடும் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், உத்தரவுகள் வெளியிடப்பட்டதாகவும் கடந்த 10 மாதங்களில் குறைந்தபட்சம் 14 முறை தேர்தல் ஆணையர்கள் ஆட்சேபம் எழுப்பியதாக, அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 'அதிகாரபூர்வ விவாதங்களின்போது மாறுபட்ட கருத்துகள் எழுவது இயல்பானது; தேர்தல் ஆணையத்தின் அனைத்து உத்தரவுகளும் சட்டபூர்வமானவை' என்று தேர்தல் ஆணையம் விளக்கமளித்துள்ளது.

எஸ்ஐஆர் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் பல்வேறு முடிவுகளுக்கு தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் கடும் ஆட்சேபம் தெரிவித்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது. எந்தெந்த விவகாரங்களுக்கு எதிர்ப்பு?: அதில், 'எஸ்ஐஆர் தொடர்பான பல்வேறு முடிவுகளை இரு தேர்தல் ஆணையர்களும் பலமுறை கேள்விக்கு உள்படுத்தியதுடன், பல சிக்கல்களையும் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, புதிய வாக்காளர்களுக்கான படிவம் 6–இல் மாற்றங்கள், வாக்காளர் தரவு தளத்தை மையப்படுத்துதல் மீதான கட்டுப்பாடு உள்ளிட்டவை குறித்து தங்களுக்குத் தெரியாமல் முடிவுகளை மேற்கொண்டதாகவும், உத்தரவுகளை வெளியிட்டதாகவும் கடந்த 10 மாதங்களில் குறைந்தபட்சம் 14 முறை அவர்கள் அதிகாரபூர்வமாக ஆட்சேபத்தை பதிவு செய்துள்ளனர். இதில், ஒரே நாளில் நான்கு முறை ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. படிவம் 6–இல் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் சட்டவிரோதம் என ஆணையர்கள் குறிப்பிட்டனர்.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் தரவுத் தளங்கள் கையாளுகையின்போது, பல்வேறு மாநிலங்களில் வாக்காளர் பெயர் மொத்தமாக நீக்கப்பட்டது தொடர்பாகவும் ஆட்சேபத்தை பதிவு செய்தனர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறுபட்ட கருத்து இயல்பே–ஆணையம் விளக்கம்: இந்த விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மற்றும் பாஜக மீது எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனங்களை முன்வைத்த நிலையில், தேர்தல் ஆணையம் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பாக ஆணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: எந்தவொரு நிறுவனத்திலும் விவாதங்களின்போது மாறுபட்ட கருத்துகளும், கண்ணோட்டங்களும் இயல்பான அங்கமாகும்.

தேர்தல் ஆணையத்தின் மூன்று ஆணையர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு அதிகாரியும் தேர்தல் முறையை மேம்படுத்தும் தங்கள் ஆலோசனைகளை ஆணையத்துக்கு வழங்க முழு அதிகாரம் பெற்றவர்களே. அந்த அடிப்படையில், தேர்தல் ஆணையர்கள் வழங்கிய ஆலோசனைகள் தேர்தல் செயல்முறைகளை மேலும் மேம்படுத்துவதாகவே இருந்தன.

உத்தரவுகள் சட்டபூர்வமானவை: தேர்தல் ஆணையத்தின் அதிகாரபூர்வ உத்தரவுகள், முடிவுகள், நிர்வாக வழிகாட்டுதல்கள் அனைத்தும், 'தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிக் காலம்) சட்டம், 2023'–இன் கீழ் நிறுவப்பட்ட சட்டபூர்வ நடைமுறைகளைப் பின்பற்றி, முழு சட்ட அங்கீகாரத்துடன்தான் வெளியிப்படுகின்றன. கடந்த 10 மாத காலகட்டத்தில் ஒரு சில குறிப்புகள் அல்லது குறிப்பிட்ட கண்ணோட்டங்களை மட்டுமே முன்னிலைப்படுத்தி, தேர்தல் ஆணையத்தின் ஒட்டுமொத்த ஒப்புதல்கள், முடிவுகள், உத்தரவுகள் மற்றும் முன்னெடுப்புகளின் செயலாக்கத்தைப் புறக்கணிப்பது சரியானதல்ல.

ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவுகள்: சமீப காலங்களில் தேர்தல் ஆணையம் சுமார் 40 புதிய முன்னெடுப்புகள் மற்றும் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்பட பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்த முடிவுகள் அனைத்தும் கடந்த ஓராண்டில் ஆணையம் ஒருமனதாக மேற்கொண்ட முடிவுகளின் விளைவாகும். ஜனநாயகத்தை மேம்படுத்துவதில் தனது முக்கியப் பங்கை உணர்ந்து, இந்திய தேர்தல் ஆணையம் தனது அரசியல் சாசன கடமைகளை முழுமையான நேர்மையுடன் நிறைவேற்றுவதில் உறுதியுடன் உள்ளது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலக அரசாணை ரத்து?




சென்னை, செப். 24–

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டும் திட்டம் பற்றி அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெளிவுபடுத்தியுள்ளார். அவர் கூறுகையில், பொதுமக்களுக்கோ அல்லது மீனவர்களுக்கோ எதிராக அரசு செயல்படாது. புதிய தலைமைச் செயலக திட்டம் மிகவும் ஆரம்ப கட்டத்தில்தான் உள்ளது. அதற்கான மதிப்பீட்டுப் பணிகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன. விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்யும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் எதுவுமே உறுதி செய்யப்படவில்லை என தெரிவித்தார்.

இந்த நிலையில், பட்டினப்பாக்கத்தில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்ய முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுதொடர்பாக பொதுத்துறை செயலாளருக்கு அவர் அறிவுறுத்தல் வழங்கி உள்ளார். அத்துடன் தலைமைச் செயலகத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய இடம் குறித்த விபரத்துடன், புதிய அரசாணை வெளியிட அவர் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**சுவாசத் தொற்று பரவல்;**

# மருத்துவமனைக்கு வரும் மக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் - சுகாதாரத்துறை அறிவுறுத்தல்!



சென்னை, செப். 24–

தமிழகத்தில் சமீப காலமாக பருவநிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் டெங்கு காய்ச்சல், கொரோனா, சின்னம்மை, கூகைக்கட்டு அம்மை போன்ற நோய்களால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக 'ஸ்கிரப் டைபஸ்' என்ற உண்ணி காய்ச்சல், டெங்கு காய்ச்சல் பாதிப்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இதில் சில தொற்று நோய் பாதிப்புகள் சுவாசம் வழியாக பரவுவதாக கூறப்படுகிறது. இதனிடையே அரசு, தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு வரும் மக்கள் முகக்கவசம் அணிவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது குறித்து, பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் டெங்குவை விட, சுவாசத் தொற்று அதிகளவில் பரவி வருகிறது. இது போன்ற பாதிப்புகள் ஒருவரிடம் இருந்து, மற்றவர்களுக்கு எளிதாக பரவும். ஆனால், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், உறவினர்கள் யாரும் முகக்கவசம் அணிவதில்லை.

முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்றாலும், தொற்று பரவல் மருத்துவமனைகள் மூலமாகவும் நிகழக்கூடும். எனவே, அலட்சியம் காட்டாமல், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைக்கு வரும் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும்" என்று அறிவுறுத்தியுள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.முத்துக்குமரன் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சத்யா ஆகியோர், மணவாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினர். உடன் கரூர் மாநகராட்சி ஆணையர் எம். பிரித்திவிராஜ் உள்ளார்.



பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்ட தலைவர் V.V.செந்தில்நாதன் தலைமையில் கரூர் வெண்ணெய் மலை அன்புக்கரங்கள் ஆசிரமத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் முதியோர்கள் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்ட நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் சக்திவேல் முருகன், மாவட்ட பொருளாளர் இளங்கோவன், மாவட்ட செயலாளர்கள் முருகேசன், மோகன்ராஜ், மண்டல் தலைவர்கள் சரண்ராஜ், தமிழ்செல்வன், செல்வி பழனிச்சாமி, ராமமூர்த்தி, சிந்தியா நடேசன் உட்பட திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கருர் தாந்தோணிமலை பெருமாள் கோயிலில் புரட்டாசி தேரேட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020